Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC . No. 14/2024
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –28

| | | | |
|---|---|---|---|
| Name: | ராஜ்குமார் | Calling: | சாமி அன் கோ கம்பெனியில் வாட்ச் மேன் |
| Father's Name: | சம்மந்தன் | Religion: | |
| Village: | கிரிசமுத்திரம் | Age: | 45 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 07.07.2026 நேரம் : 01.13 PM

(எதிரி ஆஜர் இல்லை, குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா.28 முதன்மை விசாரணை.

28.02.2023 ம் தேதி காலை 08.45 மணிக்கு சாமி அன் கோ கம்பெனியில் நான் வாட்ச்மேனாக இருந்தால் பணிக்கு வருபவர்களின் நேரத்தை குறித்துக்கொண்டிருந்தேன். வழக்கம் போல் அந்த வழியாக சைக்கிளில் செல்லும் பள்ளி மாணவர்கள் எனக்கு டாடா காண்பித்து செல்வார்கள், அன்றைய தினமும் ஒரு சைக்களில் அண்ணன் தம்பி இருவரும், மற்றொரு சைக்கிளில் முஸ்லீம் மாணவர் ஒருவரும் வளையாம்பட்டில் இருந்து கிரிசமுத்திரத்தில் உள்ள பள்ளிக்கு சென்றார்கள். ஜீப்போல் உள்ள சிகப்பு நிற கார் ஒன்று ஆம்பூரில் இருந்து வாணியம்பாடிக்கு செல்லும் மெயின் ரோட்டில் மிக வேகமாக வந்தது. சிறுவர்கள் வலது புறம் உள்ள சர்வீஸ்ரோட்டில் சைக்கிளில் வந்துக்கொண்டு இருந்தார்கள். அந்த கார் சாலையின் நடுவே இருந்த தடுப்பு சுவரில் மோதி சர்வீஸ் ரோட்டில் வந்த

பிள்ளைகளின் மீது மோதியது. மோதியதில் சைக்கிளில் சென்ற மூவரும் சம்பவயிடத்தில் இறந்துவிட்டார்கள். மூன்று சிறுவர்களுக்கும் கை, கால் , தலையில் பலமாக அடிப்பட்டது. அப்போது அங்கிருந்த நபர்கள் வந்து பார்த்தார்கள். அந்த சமயத்தில் அந்த விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர், அவர் பார்ப்பதற்கு சற்று குண்டாக இருந்தார். அங்கிருந்த நபர்கள் அந்த ஓட்டுநரை பிடித்து அடித்தார்கள், அவரை விசாரித்ததில் அவர் வேலூரில் இருந்து வந்ததாகவும் அவர் பெயர் சந்தோஷ் எனவும் கூறினார். அவரை தற்போது பார்த்தால் என்னால் காட்ட இயலும் (எதிரி ஆஜர் இல்லை, குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.). அந்த விபத்து ஏற்படுத்திய காரின் பதிவு எண் நினைவில்லை. பிறகு ஆம்புலன்ஸ் வந்து சிறுவர்களை ஏற்றி சென்றது அன்றைய தினமே மாலை போலிசார் வந்து கம்பெனியில் வந்து என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

கிரிசமுத்திரத்தில் எந்த பகுதியில் நான் வசிக்கிறேன் என்றால் நாசர் கம்பெனியின் பக்கத்து தெருவில் வசிக்கிறேன். எத்தனை வாட்ச்மேன் சாமி அன்கோ கம்பெனியில் வேலை செய்கிறோம் என்றால் பகலில் ஒருவரும் இரவில் மூன்று நபர்களும் வேலை செய்கிறோம். சாமி அன்கோ நிறுவனத்தில் சிறிது காலத்திற்கு முன்பு ஒரு நபர் மின்சாரம் தாக்கி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அந்த வழக்கிலும் போலிசார் என்னை விசாரித்து சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றால் இல்லை. நான் பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் எனது கம்பெனியின் முதலாளியை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சாட்சி சொல்வது தான் எனக்கு வேலை என்றாலும் சரியல்ல. விபத்து நடந்த இடம் வளையாம்பட்டு முருகன் கோவிலுக்கு அருகில் பழைய துவக்கப்பள்ளிக்கு முன் என்றால் சரியல்ல. சாமி அன் கோ பக்கத்தில் சம்பவத்தின் போது காம்பௌன்ட் சுவர் கட்டியிருந்தார்கள் என்றால் சரிதான். அந்த காம்பௌன்ட் சுவரை ஒட்டி மரங்கள் உள்ளது என்றால் சரிதான். வேலைக்கு வரும் நபர்களின் நேரத்தை குறித்து பதிவு செய்வது எனக்காக ஒதுக்கபட்ட அறையின் உள்பகுதியில் என்றால் சரிதான். எங்கள் கம்பெனிக்கும் நெடுஞ்சாலைக்கும் இடையே 15 மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். அதனால் நெடுஞ்சாலையில் என்ன வாகனம் போகிறது , வருகிறது என்னால் பார்க்கமுடியாது என்றால் சரியல்ல, கம்பெனியின் வாசல்படியில் தான் நெடுஞ்சாலை உள்ளது. எனது

கம்பெனியின் வாசல்படியை ஒட்டி EB Transformer உள்ளது என்றால் இல்லை. விபத்து நடந்த இடத்திற்கும் கம்பெனிக்கும் 50 மீட்டர் தொலைவு இருக்கும் என்றால் சரியல்ல. அந்த வாகனத்தில் எத்தனை பேர் வந்தார்கள் என்றால் பெண்கள் இரண்டு பேர், ஆண்கள் மூன்று பேர். ஐந்து பேரில் யார் அந்த வாகனத்தை ஓட்டினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும். வாகனத்தை ஓட்டி வரும் போது யார் அந்த வாகனத்தை ஓட்டினார்கள் என்று எனக்கு தெரியாது என்றாலும் வாகனம் நின்ற போது தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான், அந்த வாகனம் இடித்து நின்றபோது ஓட்டுநர் இருக்கையில் இருந்து இறங்கிய நபரை பார்த்தேன். ஓட்டிநரின் பக்கத்து சீட்டில் இருந்து நபர்கூட ஓட்டுநர் இருக்கையில் இருந்து இறங்கலாம் என்றால் சரிதான். இறந்தவர்கள் வளையாம்பட்டில் எந்த பகுதியை சார்ந்த நபர்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் வளையாம்பட்டில் குட்டைக்கு மேல் உள்ள பகுதியில் இருக்கிறார்கள். அந்த பகுதியில் இருந்து ரயில் ரோடு வழியாகவோ, மலைஅடி ஓரம் வழியாகவோ கிரிசமுத்திரத்தில் உள்ள பள்ளிக்கு செல்ல வழி உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த சத்தத்தை கேட்டுதான் நான் சம்பவயிடத்திற்கு சென்றேன் என்றால் இல்லை, லோடு ஏற்றவந்த வண்டிக்காக நுழைவு வாயிலை திறப்பதற்காக நின்றுக்கொண்டிருக்கும் போது தான் அந்த வண்டி வந்து மோதியது. இந்த விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளளேனா என்றால் சொல்லியுள்ளேன். அதுப்போன்ற சங்கதி என் வாக்குமூலத்தில் இல்லை என்றாலும் நான் தற்போது மிகைபடுத்தி சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பொதுவாக வெளியில் இருந்து வாகனம் ஹாரன் அடித்தால் உள்பக்கம் இருந்து நாங்கள் நுழைவாயில் திறப்போம் என்றால் சரிதான். அதனால் எதிரில் வண்டி இருந்ததாலும், மரங்கள் இருந்ததாலும் நான் சரியாக பார்த்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த சிறுவர்களின் பெற்றோர்கள் எனக்கு என்ன உறவு முறை என்றால் அவர்கள் எனக்கு எந்த உறவு முறையும் இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும் இறப்புற்ற சிறுவர்களின் பெற்றோர்கள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்றாலும் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. சிறுவர்கள் இறந்தற்காக இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் அது எனக்கு தெரியாது. சிறுவர்கள் பள்ளிக்கு செல்லும்போது எனக்கு கை அசைத்து (டாடா) செல்வார்கள் என்று சொல்லியுள்ள நிலையில் வழக்கமாக எத்தனை மணிக்கு பள்ளிக்கு செல்வார்கள் என்றால் 08.30 –08.45 மணிக்குள் செல்வார்கள். 08.30 மணி என்பது வளையாம்பட்டில் இருந்து கிரிசமுத்திரம் பள்ளிக்கு

செல்ல சரியான நேரம் என்றாலும் 08.45 மணி என்பது தாமதமான நேரம் என்றாலும் சரிதான். அதனால் அவர்கள் வேகமாக செல்ல வாய்ப்புள்ளது என்றால் சரிதான். வாகனத்தை ஓட்டிய நபர் யார் எனக்கு தெரியாது என்றாலும் ஊர் மக்களும் போலிசாரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. அந்த விபத்து எதனால் யாரால் ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) ராஜ்குமார்

SRIPATHI K

SRIPATHI K
2026.07.08
18:27:58
+0530